உ
சிவசிவ

# தமிழ் அருச்சனை மலர்

## ( முருகக் கடவுள் )

தொகுப்பாசிரியர்:

**வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்**



— வெளியிடுவோர் —

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7233

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# முருகக் கடவுள்

திருச்சிற்றம்பலம்.

சீர்வளர் அழகின் செல்வா போற்றி
பன்னிரு கண்ணுடைப் பரமா போற்றி
சமர்வேல் ஏந்திய சரவணா போற்றி
குங்கும வண்ணக் குமரா போற்றி
ஏறும யிலேறும் ஈசா போற்றி

ஆறு முகத்து ஐயா போற்றி
சங்கரன் மகிழும் சதுரா போற்றி
ஆறு பதிகட் கதிபா போற்றி
பன்னிரு கையுடைப் பாலா போற்றி
கதிர்வேல் தாங்கிய கடம்பா போற்றி

பழநி மலைவாழ் பரமா போற்றி
செவியீ ராறுடைச் செல்வா போற்றி
குன்றுதோ றாடும் குமரா போற்றி
ஐந்தொழில் புரியும் ஐயா போற்றி
சந்ததி அருளும் சரவணா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாக நாளின் விமலா போற்றி
நவவீ ரர்களின் நாயகா போற்றி
பக்தர்க் கருள்செய்து பயின்றவா போற்றி
தும்பிக் கையோன் துணைவா போற்றி
மயில்மேல் உலவும் மைந்தா போற்றி

அறுமீன் பாலுண் அழகா போற்றி
தெய்வ யானையின் தேவா போற்றி
ஞான மூர்த்தியாம் நர்தா போற்றி
மாவினைத் தடிந்த மன்னா போற்றி
செந்தில் வாழும் சேந்தா போற்றி

நான்முகன் போற்றும் நாதா போற்றி
ஊழ்வினை அகற்றும் உத்தமா போற்றி
ஔவை மகிழும் ஐயா போற்றி
ஏரகப் பதிவாழ் இறைவா போற்றி
பாகீ ரதியின் பாலா போற்றி

சிங்கனை வதைத்த சிறுவா போற்றி
திருமால் மருகா தேவா போற்றி
பரம சிவனின் பாலா போற்றி
சேவற் கொடியுடைச் செல்வா போற்றி
பரசிவ குருவே பராபரா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்வி காக்கும் வித்தகா போற்றி
கந்த புரிவாழ் கடம்பா போற்றி
புத்திமுத் திதரும் புனிதா போற்றி
பரங்குன் றமர்ந்த பரமா போற்றி
விண்குடி ஏற்றிய விமலா போற்றி

கடம்பு அணிந்த கந்தா போற்றி
அருண கிரிக்கருள் ஐயா போற்றி
கடம்பனைக் காத்த கந்தா போற்றி
இடும்பனைப்பணிகொள்இறைவாபோற்றி
வியாக்கிரா சுரனை வென்றவா போற்றி

நக்கீ ரர்க்கருள் நாதா போற்றி
பழமுதிர் சோலைப் பரமா போற்றி
மூட்டைப் பெயர்பெறு முத்தா போற்றி
தணிகை வாழும் தருமா போற்றி
ஞானவேல் பிடித்த நாதா போற்றி

இந்திரன் போற்றும் இறைவா போற்றி
கார்த்திகைக் குமரா கந்தா போற்றி
வேங்கடந் தனில்வாழ் வித்தகா போற்றி
முத்தமிழ்க் கதிபனும் முருகா போற்றி
குழந்தை வேலா குமரா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பியில் அமர்ந்த உன்னதா போற்றி
முருகன் பூண்டி முருகா போற்றி
கார்த்தி கேயா கடம்பா போற்றி
கருணைக் கடலாம் கந்தா போற்றி
செந்நிற முடைய சேயே போற்றி

கதிர்கா மம்திகழ் கடவுளே போற்றி
படைக்கடல் நடாத்திய பரனே போற்றி
நாத வடிவாம் நாதனே போற்றி
குன்றக் குடிவாழ் குகனே போற்றி
வள்ளியை மணந்த வள்ளலே போற்றி

குமாரா என்ற கோவே போற்றி
பேருருக் கொண்ட பிரானே போற்றி
அகத்தியர்க் கருளும் அண்ணலே போற்றி
சிவனார் கண்வரு சேயே போற்றி
குருவாய் நின்ற குகனே போற்றி

கந்தா கருணைக் கடலே போற்றி
கற்பனை கடந்த கந்தனே போற்றி
வினைகள் தீர்க்கும் வீரனே போற்றி
வாரணம் ஊர்ந்த வள்ளலே போற்றி
குமர குருபரன் குருவே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிக்கூத் தாடிய தோன்றலே போற்றி
சென்னி மலைவாழ் சேயே போற்றி
சுப்பிர மணிய சுவாமியே போற்றி
குறிஞ்சி நிலத்துக் கோவே போற்றி
ஈடெதிர் இலாத ஈசனே போற்றி

சாமி நாத சுவாமியே போற்றி
அத்துவ மூர்த்தி ஐயனே போற்றி
ஆவி னன்குடி ஆண்டாய் போற்றி
பாசபந் தங்களைப் பறிப்பாய் போற்றி
என்றும் இளையாய் எழிலாய் போற்றி

பிணியெலாம் தீர்க்கும் பெற்றியாய் போற்றி
மலைகள் தோறும் வதியாய் போற்றி
ஓங்கா ரத்துள் ஒளிர்வாய் போற்றி
அக்கினி தாங்கிய அழலாய் போற்றி
கிரவுஞ் சன்தனைக் கெடுத்தாய் போற்றி

நான்முகனைச் சிறை நாட்டினாய் போற்றி
செங்கட் கிடாவைச் செலுத்தினாய் போற்றி
மாபெருஞ் சூரனை வதைத்தாய் போற்றி
முந்தை வினைகளை முருக்குவாய் போற்றி
மாறா இளமை வாய்ந்தாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரைப் பூவில் தவழ்ந்தாய் போற்றி
மான்மகள் வள்ளியை மணந்தாய் போற்றி
ஊழிதொ றூழி உள்ளாய் போற்றி
சேவலும் மயிலும் சேர்த்தாய் போற்றி
மாறுகொள் அசுரரை வதைத்தாய் போற்றி

கேடில் முருகனாய்க் கிளர்ந்தாய் போற்றி
ஐயனாய் உலகை ஆக்குவாய் போற்றி
மறையின்பொருளாய் மன்னினாய் போற்றி
சரவணந் தன்னில் தவழ்ந்தாய் போற்றி
கள்ளப் புலனைக் களைவாய் போற்றி

அடியார் இடர்களை அழிப்பாய் போற்றி
ஒருவனாய் எங்கும் ஒளிர்வாய் போற்றி
பாலசுப்ர மணிய போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ மில்க்வைற் நீலசோப்

★ நியூ மில்க்வைற் சோப்

★ மில்க்வைற் பார் சோப்

★ மில்க்வைற் சலவைப் பவுடர்

★ மில்க்வைற் 25 சதம் சோப்

★ மில்க்வைற் 12 சதம் சோப்

★ மில்க்வைற் மெடிக்கேட்டற் சோப்

★ நீம் வாசனை சோப்
(வேப்பெண்ணெய் கலந்தது)

★ நீம் சுகாதார தூபம்

★ ஒலிவ் ஸ்நானப் பவுடர்

---

அன்பான வேண்டுகோள்

மில்க்வைற் உற்பத்திப் பொருட்களுக்கு நீங்கள் அமோகமாக ஆதரவளித்தால் நாங்கள் இத்தகைய வெளியீடுகளைப் பிரசுரித்து அன்பளிப்புச் செய்ய உதவியாயிருக்கும்.

பார்த்து வாங்குங்கள் மில்க்வைற் தயாரிப்புக்களை

---

# மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தந்தி: "மில்க்வைற்"

கிளை: 79, மெசென்ஜர் வீதி, கொழும்பு-12

தொலைபேசி: 36063

---

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org